சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 14.07.2025
பி.வா.சா.6 – பழனிச்செல்வம் S/o நடராஜன்
O.S No.26/2019 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எது குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். தான செட்டில்மெண்டில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன். அதற்காக வந்துள்ளேன். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளதை தவிர வேறு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி முத்துக்கருப்பன் தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் கையெழுத்து செய்ததை நேரடியாக பார்த்தாக சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, ஆனால் 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்ததை நான் நேரடியாக பார்த்தேன். 1ம் பிரதிவாதி முத்துகருப்ப நாடார் என்று கையெழுத்து செய்வது வழக்கம் என்றால் சரிதான். வா.சா.ஆ-9 மற்றும் 10 சாட்சியிடம் காட்டப்பட்டு அவை தான் நான் குறிப்பிடும் தான செட்டில்மெண்ட் பத்திரமா என்று கேட்கப்பட்டது சாட்சி எனக்கு ஓரளவிற்கு தான் படிக்க தெரியும் என்று கூறுகிறார். சாட்சி பத்திரங்களை பார்த்து அதில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது தான் என்று குறிப்பிடுகிறார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நேரடியாக நான் கையெழுத்து முத்துகருப்பன் செய்ததை பார்த்ததாக வாசகம் இருக்கிறதா என்றால் இல்லை. தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் என்னென்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது மனைவி பெயர் குருவம்மாள் என்றால் சரிதான். இந்த வழக்கின் 4ம்

பிரதிவாதியான மீனாளின் சகோதரி தான் என்மனைவி குருவம்மாள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி மீனாள், என் மனைவி குருவம்மாளின் தாயார் தான் மீனாட்சி என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 10 ஆவணங்களில் மேற்படி மீனாட்சியும் ஒரு சாட்சி என்றால் சரிதான். முத்துக்கருப்பன் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் 6-7 வருடங்கள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ-9 மற்றும் 10 ஆவணங்களை பற்றி அவர் உயிருடன் இருந்த காலத்தில் அதுபற்றி இந்த வழக்கில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறார். இதுபற்றிய விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சி கையெழுத்து போட்ட காரணத்திற்காக மட்டுமே நான் சாட்சியாக அழைக்கப்பட்டிருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சாட்சியாக கையெழுத்து செய்யும் போது முத்துக்கருப்பனுடன் யார் யார் உடன் இருந்தார்கள் என்ற விபரத்தை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி இறந்த பெரியதம்பி முத்துக்கருப்பனின் மூத்த மகன் ஆவார். முத்துக்கருப்பன் மூத்த மகனுக்கு சொத்து எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு முத்துகருப்பனின் குடும்ப விஷயங்கள் தெரியாது என்றும் என் மனைவியின் உடன்பிறந்த சகோதரி அழைத்தன் பேரில்நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.14 20:30:06 +0530

Sub Judge

Melur